பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 19 செவ்வாய்க்கிழமை 03.08.2021 கதிர் 271

**இது ரகசியம் அல்ல!**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் ஆளும் தரப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்த தவறவில்லை.

இந்த வாரம் நாடாளுமன்றில் அதை ஆட்சித் தரப்பு வாக்கெடுப்புக்கு விடுமா என்பது இன்னும் இறுதியாகத்

பக்கம்02

# தடுப்பூசியைப் பெறுவதில் வடக்கு மக்கள் மிக ஆர்வம்

## இராணுவத் தளபதி வரவேற்பு

**வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுவதில் மக்கள் மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர். இதனை நாம் வரவேற்கின்றோம்.**

**– இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

2

## 62 வீதமானோருக்கு வடக்கில் தடுப்பூசி



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மக்கள் தொகையில் 30 வயதுக்கு மேற்பட்ட 62.09 சதவீதமானோர் கொரோனாத்

11

## கொரோனோவால் யாழில் மேலும் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சுண்டுக்குளியைச் சேர்ந்த 83 வயதுடைய வயோதிபரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால்

11

## விசேட தேவையுடையோருக்கான தடுப்பூசி ஏற்றல் நாளை ஆரம்பம்

யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் விசேட தேவையுடையோருக்கான தடுப்பூசிகள் நாளை முதல் வழங்கப் ப டவுள்ளன என்று சுகாதாரப் பிரிவின் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாகக் கொரோனாத் தடுப்பூசி வழங்கலின் மூன்றாம் கட்டம் இடம்பெற்று வரும் நிலையில், வயோதிபர்கள்,

2

## பல வெளிநாடுகளின் புலனாய்வு அமைப்புகள் இலங்கை நாட்டுக்குள்

பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுப்புலனாய்வுஅமைப்புகள் இலங்கையில் செயற்படுகின்றன என்ற தகவல் வெளியாகியுள்ளதாக டெய்லி மிரர் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில்

11

## இன்றும் நாளையும் நல்லூரில் கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி

யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட மூன்று மாத காலத்தைக் கடந்த கர்ப்பிணிகளுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து கொரோனாத் தடுப்பூசி வழங்கப் படவுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுவரையில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத

2

## 2,382 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 382 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின்

2


## மேலும் 63 பேர் சாவு; மொத்தக் காவு 4,571

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 63 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இது வரையில் பதிவாகியுள்ள கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 571 ஆக அதிகரித்துள்ளது.

11

## வல்வைப் படுகொலை நினைவேந்தல் நேற்று



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 03

வல்வைப் படுகொலையின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.

2

## யாழ்.மாநகரசபையை கூட்டுமாறு கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.03

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைப் பகுதிக்குள் உரிய அனுமதி ஏதும் பெறப்படாமல் வீதிகளிற்குக் குறுக்கே விளம்பர பதாதைகள் அமைக்க மாநகர முதல்வர் தம்பாட்டில் இடமளித்தார் எனக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் ஆராய

11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானிக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படும் இறுதி வடிவத்தில் இச் சட்டத்தின் மூலம் உயர்கல்வியைத் தனியார் மயப்படுத்தும் ஏற்பாடு தொடர்ந்து இருக்குமானால், அந்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவாகத் தனது கட்சியின் எம்.பிக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று விமல் வீரவன்ஸவின் சுதந்திர தேசிய முன்னணிக் கட்சி தெரிவித்திருக்கின்றது.

உதய கம்மன்பில்லவின் பிவித்துரு ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி போன்றவையும் அதே நிலைப்பாட்டை எடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தமது கட்சியும் தற்போது இருக்கும் வடிவத்தில் இந்தச் சட்டமூலம் வரும் என்றால் அதை எதிர்க்கும் என்று 'துணிச்சல்' ஆகக் கூறியிருக்கின்றார்.

ஆனால், இந்தக் கட்சிகள் எல்லாம் என்னதான் கூப்பாடு போட்டாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்தால் எந்தச் சிக்கல், சில்லெடுப்புகளுமின்றி இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றி விட்டுப்போகலாம். அதற்கு அவருக்கு நெருக்கடி ஏதும் இல்லை. நெருக்கடி கொடுக்கக் கூடிய தாராளமான வாய்ப்பை - வலிமையான சந்தர்ப்பத்தை - இப்போது ஆளும் தரப்பில் இருந்து கொண்டு இச் சட்டத்தை எதிர்க்கும் விமல், உதய கம்மன்பில, வாசு தேவநாயணக்கார போன்றோரின் கட்சிகளும், பிரதான எதிர்க்கட்சியும், இன்று வீதியில் இறங்கி இச்சட்ட மூலத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்களும், ஆசிரியர் சம்மேளனங்களும் கோட்டை விட்டுவிட்டு இப்போது வந்து குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும், பிரபலாபத்தைப் பிளந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

இந்தச் சட்ட மூலத்தை உயர்நீதிமன்றத்தில் சட்டச் சவாலுக்கு உட்படுத்தக் கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டு விட்டு இப்போதுவந்து நின்று கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது பற்றி வாதம் பிளக்கின்றார்கள்.

ஒரு சட்ட மூலம் நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டு ஒரு வாரத்துக்குள் அது பற்றிய ஆட்சேபனை ஏதும் இருந்தால் அதனை உயர்நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்தால் நீதிமன்றம் அதை பரிசீலிக்கும்.

அச்சட்டமூலம் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணானதா? அப்படி முரணானதாயின் அதை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதுமா? அதற்கு மேல் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் அனுமதி, அங்கீகாரமும் அதற்குப் பெறவேண்டுமா என்பவை பற்றி எல்லாம் விசாரித்து உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கும் (சபாநாயகருக்கும்) நிறைவேற்றதிகாரத்துக்கும் (ஜனாதிபதிக்கும்) அறிவிக்கும். அத்தீர்ப்பு மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் அரசு அதன்பின் நடவடிக்கை எடுக்கும்.

இந்தக் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட போது, இப்போது அதனை எதிர்க்கும் தரப்புகள் எல்லாம் விட்டத்தைப் பார்த்துத் தூங்கிக் கொண்டிருந்தன போலும்.

அந்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தும் எந்த ஆட்சேபனையையும் அதற்கான காலக்கெடு கொடுத்த ஒரு வாரமும் எந்தத்தரப்பும் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

அதனால், அந்தச் சட்டமூலம் உயர்நீதிமன்றச் சட்டச் சவாலைச் சந்திக்காமலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்தச் சட்ட மூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் ஏதும் தெரிவிக்காத காரணத்தினால், அதனை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றினாலே போதுமானது என்பதுதான் நிலைமை.

நாடாளுமன்றத்தில் மட்டுமட்டாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் மொட்டுக் கட்சி கூட்டணியின் அரசுக்கு, பங்காளிக் கட்சிகளின் ஆதரவின்றியே நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையில் ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றுவது ஜுஜுபி வேலை.

நீதிமன்றத்தில் இதனைச் சவாலுக்கு உட்படுத்தியிருந்தால், குறைந்த பட்சம் சில பிரிவுகளை விலக்கி மாற்றுமாறும், இல்லையேல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது கட்டாயம் எனவும் உயர்நீதிமன்றத்தின் மூலம் கட்டுப்பாடுகளை விதிக்க வைத்து அரசுத் தரப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கலாம்.

அந்த அருமையான வாய்ப்பைக் கோட்டை விட்டுவிட்டு வந்து இப்போது மக்கள் போராட்டம் என்று உலுப்புகின்றார்கள்.

மக்கள் மன்றில் இன்று பிளக்கும் நியாயங்களை எல்லாம் உயர்நீதிமன்றத்தில் பிளந்திருந்தால் சாதகமான உத்தரவு எதனையும் பெற்றிருக்க முடியும்.

அரசு, சத்தம் சந்தடியின்றி - ஆரவாரங்களின்றி - கொண்டு வரும் சட்ட மூலங்களின் பின்னால் பொதிந்து கிடக்கும் தந்திரோபாயங்கள் குறித்து எங்கள் தரப்புகளுக்கு கொஞ்சம் பிந்தித்தான் பத்தும் - டியூப் லைட்கள் என்பதால்.

இப்படிப் பிந்திப் பத்தின விடயங்களில் ஒன்று கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலம். அது விடயத்தில் நாங்கள் எல்லோரும் டியூப் லைட்தான். அது தான் பிந்திப் பத்தி, வழக்குப்போடும் வாய்ப்பைக் கோட்டை விட்டு நிற்கின்றோம்.

- மின்னல் -

## தடுப்பூசியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவதில் வடக்கு மக்கள் ஆரம்பத்தில் ஆர்வத்தைக் காட்டவில்லை. எனினும், அவர்கள் தற்போது மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர். ஒவ்வொரு மாகாண மக்களும் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

கொரோனாவை விரட்டக்கூடிய ஒரே ஆயுதம் தடுப்பூசியே. எனவே, நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்குவதில் அரசு அதிக சிரத்தையுடன் செயற்படுகின்றது.

தடுப்பூசிகளைப் பெற்றுவிட்டோம் எனக் கருதி சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் மக்கள் இருக்கக்கூடாது.

கொரோனாத் தடுப்புக்கான சுகாதார விதிகளை சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார்.

## 2, 382 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 13 ஆயிரத்து 731ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,958 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 80 ஆயிரத்து 868 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## விசேட தேவையுடைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கவீனர்கள் மற்றும் விசேட தேவையுடையோர் எனப் பலர் இதுவரை தடுப்பூசி பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

அவர்களுடைய தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து அவர்களுடைய இடங்களுக்கே சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடானது நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், தகவல்கள் பெறப்பட்டு வருவதால், தடுப்பூசி பெறாத விசேட தேவையுடையோர் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைத் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாடு முழுவதும் குறித்த விசேட தேவையுடையோருக்கு அவர்களைத் தேடிச் சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வல்வைப் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிவாஜிலிங்கத்தின் அலுவலகத்தில் நேற்றிரவு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, வல்வெட்டித்துறைப் பகுதியில் 1989ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 63 பொதுமக்களும் நினைவுகூரப்பட்டனர்.

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02ஆம் திகதி வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையில் நடந்த மோதலில் 09 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

அதையடுத்து, ஆகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் பொது மக்களை வகைதொகையின்றி படுகொலை செய்தனர்.

குறித்த திகதிகளில் 63 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 100 இற்கும் மேற்பட்ட மக்கள் படுகாயங்களுக்குள்ளானார்கள். அப்பகுதி மக்களின் 123 வீடுகள் முற்றாக எரித்து சாம்பலாக்கப்பட்டன. 45 கடைகள் முற்றாகச் சூறையாடப்பட்டன. 175 மீன்பிடி வள்ளங்கள் முற்றாக எரித்தழிக்கப்பட்டன.

அன்றைய நாள்களில் இந்திய இராணுவத்தினரின் படுகொலைகளால் முழு வல்வெட்டித்துறையும் சுடுகாடாகியது.

## இன்றும் நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

30 வயதுக்கு மேற்பட்டவர்களும் இந்த இரண்டு நாள்களும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வந்து தங்களுக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.





காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்துக்கு சுகாதார சேவை பணிப்பாளர் அனுமதி வழங்கினாரா?

## மரிக்கார் எம்.பி. சந்தேகம்



மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பரிந்துரைத்தாரா என ஐக்கிய மக்கள் சக்தி கேள்வியெழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இவ்வாறு சந்தேகம் வெளியிட்டார்.

கொரோனாத் தொற்றின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு அவர் இந்த முடிவிற்கு அனுமதி வழங்கியிருப்பாரா என்ற சந்தேகம் இருப்பதாக அவர் கூறினார்.

சுகாதாரத் துறையினர் மாகாணங்களுக்கு இடையிலான பயணம் தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ள நேரத்தில் அரசாங்கம் இத்தகைய முடிவை எடுத்துள்ளமை தொடர்பிலும் அவர் அதிருப்தி வெளியிட்டார். இதேவேளை அரசாங்கம் தனது குறுகிய நோக்கத்துக்காக நாட்டை ஆபத்துக்கு கொண்டு செல்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் என்றும் எஸ்.எம். மரிக்கார் குறிப்பிட்டார்.

# ஆரோக்கியமான பயணிகள் போக்குவரத்துக்கு சம்பந்தப்பட்ட தரப்பினரே பொறுப்பு -ஹேமந்த



உரிய சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுபவர்களே பொறுப்பேற்க வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் அதற்கான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து ஆரம்பமாகியவுடன், மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, இந்நிலையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் சுகாதார நடைமுறைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் ஹேமந்த ஹேரத் கேட்டுக்கொண்டார்.

# டெவோன் நீர்வீழ்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் தொடர்பாக விசாரணை

திம்புளை பத்தனை – டெவோன் நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) சடலமாக கண்டெடுக்கப்பட்டவர் பத்தனை நகரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான வீ.மலர்விழி (வயது 53) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமற்போன குறித்த பெண் தொடர்பாக திம்புளை- பத்தனை பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய டெவோன் நீர்வீழ்ச்சிப் பகுதியில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது குடை, பாதணிகள், கைப்பை ஆகியவற்றை நீர்வீழ்ச்சி பகுதியில் இருந்து பொலிஸார் மீட்டனர்.

அதன்பின்னர் மாலைவேளையில், நீர்வீழ்ச்சியின் சுமார் 200 அடி பள்ளத்தில், நீரில் மிதந்த நிலையில் பெண்ணின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

மேலும் உயிரிழந்தோரின் உடல், பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# சிறுவர்களை வீட்டுப் பணிக்கு அமர்த்தியோருக்கு எச்சரிக்கை!

வீட்டு வேலைகளில் குறைந்த வயதுடைய சிறுவர்களை ஈடுபடுத்தியிருக்கும் வீட்டு உரிமையாளர்கள், அவர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என போக்குவரத்து மற்றும் சமூக பொலிஸ் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வகையில் இவர்களை மீள அனுப்பாதவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

எதிர்காலத்தில் சகல கிராம அதிகாரிகள் பிரிவுகள் தோறும் ஒரு சமூக பொலிஸ் அதிகாரி நியமிக்கப்படவுள்ளார்.

அவர்கள் சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவுடன் இணைந்து இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

தற்போது மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவை அனுமதிக்கப்பட்டுள்ளதால் வீட்டு உரிமையாளர்கள் தமது குறைந்த வயது சேவகர்களைத் திருப்பி அனுப்புவதில் சிரமம் இருக்காது. - என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# வடமாகாண ஆளுநர் செயலகம் முன்னால் சுகாதாரத் தொண்டர்கள் நேற்று போராட்டம்!






வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்திற்கு தமது பணிகளை பொறுப்பேற்க அனுமதிக்குமாறு கோரியே தாம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என என சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் சுமார் 150 நாள்களுக்கு மேலாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், ஏற்கனவே யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடி, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கொழும்பிற்கு வருமாறும் ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்ததாகவும் கூறியமையையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டோருக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பும் இடம்பெற்றது.

சந்திப்பின்போது குறித்த சுகாதாரத் தொண்டர்களை ஒரு லட்சம் வேலைவாய்ப்புக்குள் உள் வாங்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தங்களுக்குரிய வேலைவாய்ப்பு தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் இன்று வரை மேற்கொள்ளப்படாததன் காரணமாக தாம் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளோம் எனத் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புத்தெழுச்சிக்கும் இடமில்லை

**இனவாத முரண்பாடுகளுக்குள் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் மூன்று இனங்களையும் ஒன்றிணைத்து இலங்கையர்களாக மீட்டெடுப்பது குறித்து முன்னாள் வெளிவிவகார மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.**

**அதற்கு புதிய அரசியல் மாற்றம் – அரசியல் கலாசாரம் – அவசியம் என்ற அவரின் கூற்று முற்றிலும் சரியானதுதான்.**

**இனவாதத்தினால் கடந்த முக்கால் நூற்றாண்டுகளாகப் பிளவுபட்டு நிற்கும் இந்த இலங்கைத் தீவில் அந்த ஒன்றிப்பு – ஐக்கியம் – பிணைப்பு – சாத்தியமானதா என்பதுதான் கேள்வி.**

**இனவாத முரண்பாட்டின் கசப்பான அனுபவங்களுடன் – பட்டறிவுடன் – வளர்ந்து, வாழ்ந்து விட்ட சந்ததியினரால் அந்தச் சகதியில் இருந்து வெளியே வந்து, உண்மையான, நீதி, நியாயமான, ஒப்புரவான ஒரு சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கத்தன்னும் முடியுமா என்பது கேள்விக்குரியதே. சந்தேகத்துக்குரியதே.**

**நாட்டில் உள்ள அரசியல் கலாசாரத்தின் மீது மக்கள் வெறுப்படைந்து விரக்தியுற்ற நிலையில் உள்ளனர் என்று மங்கள சமரவீர விசனத்துடன் சுட்டிக்காட்டும் நிலைமை கூட உண்மையானதுதான். யதார்த்தப் புறநிலைதான்.**

**இப்படி இலங்கைத் தீவு இனவாதக் குரோதத்தில் மூழ்கிப் பிளவுபட்டு நிற்கும் நிலைமை தொடர்வதை தடுத்து, நாட்டை மீட்க வேண்டும் என்றால் – காப்பாற்றவேண்டும் என்றால் – மூவினங்களையும் சேர்ந்த இளையோர் இலங்கையர்களாக அணி திரள வேண்டும் என்கின்றார் மங்கள.**

**காலங்காலமாக இனக்குரோதத்துடனும், வெறுப்புணர்வுடனும், பகைமைப் போக்குடனும் ஒருவரை ஒருவர் பார்த்து, அணுகி, சந்தேகத்துடன் பழகி வந்த இனங்களின் இளைஞர் சமூகம் மங்கள சமரவீர குறிப்பிடுகின்றமை போல அதற்கு வெளியே வந்து விசாலமான, நீதி – நியாயமான, மற்றவர் உரிமைகளையும் தம்முடையவை போன்று மதிக்கின்ற பண்பியல்புடன் ஏனைய தரப்பினரையும் நோக்கத் தயாராவார்களா என்பது முதல் கேள்வி.**

**அப்படி அடுத்த தலைமுறையினர் – வளர்ந்து வரும் நமது இளம் பருவத்தினர் சிந்திக்கவும், செயற்படவும் இப்போது இனக்குரோதத்தில் அரசியல் நடத்தும் நமது தற்போதைய தலைமைகள் இடமளிக்குமா என்பது அடுத்த பெரிய வினா.**

**இப்போது நாட்டின் அரசியலில் முன்னிலையில் திகழும் நமது தலைமைகளின் பிரதான அரசியல் மூலதனமே இனக்குரோதமும், இனவெப்பியாரமும், இன முரண்பாடும்தான்.**

**பேரினவாதிகள் மத்தியிலும் சரி, சிறுபான்மையின மக்கள் மத்தியிலும் சரி, அரசியல்வாதிகளின் ஒரே மூலதனமாக இருப்பது இனப்பகைமை என்ற குரோதமும் அதனால் மக்கள் மத்தியில் நீடிக்கும் வெறுப்புணர்வும்தான்.**

**அந்த அரசியல் சகதிக்குள் இருந்து நாடும் மக்களும் மீள்வதற்கான இடைவெளியையே இனவாதத்தை நம்பி, அதிலே அரசியல் நடத்தும் தலைவர்கள் விட்டுத் தரமாட்டார்கள் என்பது உறுதி.**

**அந்த நல்ல மனது, பேருள்ளம் நமது அரசியல் தலைவர்களுக்கு இருந்திருக்குமானால், இனவாதமே நாட்டை விட்டு ஒழிப் பல தசாப்பதங்கள் கடந்திருக்கும்.**

**பதவியைப் பிடிப்பதற்கும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், மக்கள் செல்வாக்கைச் சுருட்டுவதற்கும் இனக் குரோதத்தைத் தூண்டி, முரணிலையை வளர்ப்பதுதான் ஒரே மார்க்கம் என்ற குறிக்கோள் கொண்ட நமது அரசியல் தலைமைகள் மங்கள சமரவீர குறிப்பிடுகின்றமை போன்ற இனசௌஜன்யம் ஏற்பட இடமே அளிக்கமாட்டார்கள்.**

**பதவி வெறியிலும், அது தரும் பவிசுகள், சிறப்புரிமைகள், வசதிகள், வருமானங்கள் போன்றவற்றிலும் காலம் முழுவதும் தொங்கிக் கொண்டிருக்கும் நமது அரசியல் தலைவர்கள் அறளை பெயர்ந்த பின்னரும் கூட பதவிகளை விட்டுக் கீழிறங்க மறுத்து அடம் பிடித்து நிற்கும் அற்பத்தனத்தை – அவலப் போக்கை – நாம் இப்போது கண்டு நிற்கின்றோம்.**

**இனவாதத்தால் முரண்பட்டு நிற்கும் இனங்களுக்கு இடையில் இந்த விடயத்தில் முழு ஒற்றுமைப்பட்ட – ஒரே மாதிரியான – போக்கு இருப்பது அவதானிக்கத்தக்கது.**

**அவர் சிங்களத் தலைவராக இருக்கட்டும், தமிழ்த் தலைவராக இருக்கட்டும் அல்லது முஸ்லிம் தலைவராக இருக்கட்டும். வயது முதிர்ந்து தாங்களாகவே முற்கூட்டியே விலகி அடுத்த தலைமுறைக்கு விட்டுக் கொடுத்த அரசியலாளர்கள் யார்?**

**ஆகவே, இனவாதமற்ற – நேர்மையான பண்பியல்புகளைக் கொண்ட – இளைய தலைமுறையினர் ஒன்றித்துத் தேசப்பற்றாளர்களாக – புதிய தலைமையாக – இங்கு எழுச்சி கொள்வது இப்போதைக்கு நடைமுறைச் சாத்தியமற்றது. அதற்கான இடைவெளியையும் யாரும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. அதுதான் உண்மை நிலைமையாகும்.**

# அபிவிருத்தி போர்வையில் எமது வளங்களை மற்ற நாடுகளுக்குத் தாரைவார்க்கிறது அரசு

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் காட்டம்

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிக்குடாவில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச மீனவர் சங்கங்களுடனான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கௌதாரி முனையில் அமைக்கப்பட்டுள்ள கடல் அட்டை பண்ணை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண கடற்றொழிலாளர் இணைய தலைவர் வீ.சுப்பிரமணியம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடக்கு, கிழக்கின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், பூநகரி கடற்றொழிலாளர் சமாச தலைவர் யோசப் பிரான்சிஸ் மற்றும் மீனவ சங்கங்களின் தலைவர்கள், தொழிலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின் ஊடக சந்திப்பு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி ஊடக சந்திப்பில் வ.க.இ.அன்ரனி ஜேசுதாசன் கருத்து தெரிவிக்கையில் -

இலங்கையை பொறுத்த வரையில் எமது ஆட்சியாளர்கள் எங்களுடைய வளங்களை பல நாடுகளுக்கு விற்கின்ற அதேவேளை பல நாடுகள் எமது வளங்களை சூறையாடுவதற்கு வழி வகுத்துள்ள வேளையிலே அதிக ஆதிக்கத்தை சீன ஆட்சியாக மாறிக்கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். கடந்த காலங்களில் பார்க்கின்ற வேளை சீனர்களுடைய ஆதிக்கம் வடபகுதியிலும் குடிகொள்கின்றதையும் காணக்கூடியதாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப்பிரதேச கௌதாரி முனையில் மீனவ சங்கங்களே அறியாமல் அவர்களது அனுமதியும் இல்லாமல் சீனப் பிரஜைகள் இரண்டு ஏக்கருக்கு உட் பட்ட காணிகளுக்குள்ளே அட்டைக்குஞ்சுகளை வளர்ப்பதற்கான பண்ணைகளை உருவாக்கி இருக்கின்றார்கள். யாருடைய அனுமதி பெற்று இதை இவர்கள் செய்திருக்கிறார்கள் என்ற சந்தேகமான கேள்வியை உருவாக்கியுள்ளது. இன்று இடம்பெற்ற மீனவ சங்கங்களோடுட னான கலந்துரையாடலில் எந்தவிதமான அனுமதியும் தம்மிடம் பெறாமல்தான் குறித்த அட்டை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது - எனவும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் கடந்த காலங்களில் கடல்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார் குறித்த பண்ணை எங்களுக்கு தொழில்நுட்பத்தையும் முதலீட்டையும் தருவதாக இருக்கிறது. ஆகவே அவர்கள் சீன பிரஜைகளா அல்லது வேறு நாட்டு பிரஜைகளா என்பதல்ல எங்களுக்கு முக்கியம் முதலீடும் தொழில்நுட்பமும் எங்களுக்கு முக்கியம் என்று கூறியிருந்தார் அவ்வாறானால் தொழில்நுட்பத்துக்கும், முதலீட்டுக்காகவும் எங்களுடைய நிலத்தை மற்றவருக்கு தாரைவார்த்து அல்லது விற்பது சரியான விடயமா என்று நாங்கள் பார்க்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அரசாங்கம் அபிவிருத்தி என்ற போர்வையில்எங்களுடைய வளங்களை மற்றவர்களுக்கு கொடுக்கின்ற முயற்சிகளில் முயல்கின்றதா என்ற கேள்வி எங்களுக்குள்ளே இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

# மக்கள் சக்திக்கு ஆதரவளித்த உறுப்பினர்களை மீண்டும் ஐ.தே.கட்சிக்கு அழைக்கத் திட்டமாம்!

## ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்



ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பரந்துபட்ட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில் -

மா நகர சபை , நகர சபை மற்றும் பிரதேச சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பானவிடயங்களை ருவன் விஜேவர்தன, பாலித ரங்கே பண்டார, வஜிர அபேவர்தன மற்றும் சந்தித் சமரசிங்க ஆகியோர் முன்னெடுத்து வருகின்றனர்.

சுமார்1,500பேர்வரையில் ஐக்கியதேசியக்கட்சியை பிரதிநிதித்துவம் செய்து உள்ளூராட்சிமன்றஉறுப்பினர்களாக உள்ளதுடன் மீண்டும் கட்சியில் இணைவதற்கு ஆயிரத்துக்கும்மேற்பட்டவர்கள்விருப்பத்தைத் தெரிவித்து விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். இதனடிப்படையில் மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது குறித்த விண்ணப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

# கடற்கரையை சுத்தம் செய்யும் இயந்திரங்களை சிங்கப்பூர் அமைப்பு இலங்கைக்கு வழங்கியது



பிளாஸ்டிக் கழிவுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட உலகளாவிய இலாப நோக்கமற்ற கூட்டமைப்பு இலங்கைக்கு கடற்கரையை சுத்தம் செய்யும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

கடற்கரையை சுத்தம் செய்யும் எட்டு பீச் டெக் ஹைட்ரோ ஸ்வீபி இயந்திரங்களை சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட உலகளாவிய இலாப நோக்கமற்ற கூட்டமைப்பு இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ளது.

இந்த நன்கொடை வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற விழாவில் முறையாக கடலோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்வான நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதான டி சில்வா மற்றும் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக் குழுவின் தலைவர் திருமதி தர்ஷினி லஹந்தபுர ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

ஜேர்மனியில் உள்ள கோஸ்போஹெர் ஜெலன்டெஃபாஹெர்ஜியூக் ஏஜி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கடற்கரையை சுத்தம் செய்யும் பீச்டெக் ஹைட்ரோ ஸ்வீபி இயந்திரங்கள், பிளாஸ்டிக் நாற்றுகள் மற்றும் ஏனைய வகைக் கழிவுகளை திறம்பட மற்றும் திறமையாக சுத்தம் செய்யும் திறன் கொண்டவையாகும்.

அபாயகரமான பொருள்களுடன் மனிதத் தொடர்பைக் குறைப்பதன் மூலம் பாதுகாப்பான முறையில் கடற்கரையை சுத்தம் செய்ய உதவுவது இந்த இயந்திரத்தின் மற்றுமொரு நன்மையாகும்.

மே 2021 இல் இலங்கையின் மேற்குக் கடற்கரையில் மூழ்கிய எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை சுத்தம் செய்வதற்கு இந்த இயந்திரங்கள் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நன்கொடை சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகத்தால் ஒருங் கிணைக்கப்பட்டது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 33

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதல் சம்பவத்தில் புலிகளின் யாழ் தளபதி கிட்டு ஒரு காலை இழந்தார். சிகிச்சைக்காக அவரை சென்னைக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு இரண்டாவது சத்திர சிகிச்சை ஒன்று துண்டிக்கப்பட்ட காலில் இடம்பெற்றது. அதைச் செய்தவர் பிரபல மருத்துவர் ஹரிஹரன். அவர் கேணல் ஹரிஹரனின் சகோதரர் என ஆரம்பத்தில் நினைத்திருந்தேன். அது தப்பு எனப் பின்னர் கேணல் ஹரிஹரன் மூலமே அறிந்துகொண்டேன்.

கிட்டு புலிகளின் யாழ் தளபதியாக இருந்த போது என் மீது அதிக மதிப்பும் நட்பும் வைத்திருந்தார். அப்போது யாழ்ப்பாணத்தில் அனைத்து இயக்கங்களும் இயங்கின. ஆனாலும் கிட்டுவுடன் இருந்த மாதிரி பிறருடன் எனக்கு பரிச்சயம், நட்புறவு இருந்ததில்லை. இன்று அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். யாழ் இராணுவப் பொறுப்பாளராக இருந்தார். அவரையும் கூடச் சந்தித்திருந்தேன். யாழ் பத்திரிகையாளர்களுக்காக அவரும் சில விருப்புக்குரிய விடயங்களைச் செய்தார். ஆனால் கிட்டுவுடன்தான் எனக்கு அதிக பரிச்சயம் இருந்தது. நாங்கள் ஒரே வயதினர். ஆனால் 'அண்ணே' என்றுதான் என்னை அழைப்பார். என் பெயர் அவர் மனதில் ஏனோ 'வித்தியாசரண்' என்று




இளம் எஸ்.டி.எஸ்.

பதிந்துவிட்டது. வெளிநாட்டில் அவரிடமிருந்து பல கடிதங்கள் பின்நாள்களில் அஞ்சலில் எனக்கு வந்துள்ளன. அவை எல்லாவற்றிலும் 'வித்தியாசரண்' என்றுதான் முகவரியிட்டிருப்பார். அவர் புலிகளின் தளபதியாக இருந்தபோது புலிகளின் 'ஈழமுரசு' பத்திரிகை மற்றும் 'ஈழநாடு', 'முரசொலி' பத்திரிகைகளை தவிர்த்து, என் மூலம் உதயனுக்கு 'எக்ஸ்குளுசிவ்' செய்திகள், தகவல்களை வழங்குவார். எனக்கும் மதியுரைஞர் பாலசிங்கம் இடையிலான நட்புறவு – நல்லுறவு – ஏற்பட முன்னர் உருவான நட்பு அது. விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான பொன்னம்மான், ராதா, ஜனகன், மேனன் போன்றவர்கள் யாழ் இந்துவில் என் காலத் தோழர்கள். ஒன்றாக விளையாடி, சைக்கிளில் சுற்றி, சுழற்றி காலத்தைக் கழித்த நண்பர்கள். பொட்டம்மானின் தமையனும் நானும் வகுப்புத் தோழர்கள். இந்த இயல்பான நெருக்கம், நட்புரிமை காரணமாக என்னவோ ஆரம்பம் முதல் கிட்டு என் மீது வாஞ்சையுடன் கூடிய ஒரு தோழமையை எப்போதும் பேணினார். 'வித்தி கிட்டுவின் ஆள்' என்ற ஒரு கணிப்பு மற்றைய இயக்கத்தவர்கள் மத்தியில் இருந்தமையை நானறிவேன். எனக்கும் கிட்டுவுக்கும் இடையிலான ஊடாட்டம் உணர்வுபூர்வமான பல விடயங்களை உள்ளடக்கியது. இத்தொடருக்குத் தொடர்பு இல்லாதமையால் அவற்றை விட்டு விடுகிறேன்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் 1987 இறுதியில் மோதல் வெடித்ததை அடுத்து அச்சமயம் சென்னையில் திருவான்மியூரில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த கிட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

அதேசமயம் புலிகளின் தொடர்பு அலுவலகம் சென்னை அடையாறு இந்திரா நகர் பகுதியில் இயங்கி வந்தது. அதற்குப் பொறுப்பாக 'சின்னப் பையன்' ஒருவர் இருந்தார். கஸ்ட்ரோ அவர் பெயர். அப்போது அவர் சின்னப் பையன்தான். பின்னாள்களில் களத்தில் யுத்தம் ஒன்றில் முள்ளந்தண்டில் ரவை பட்டமையால் முழங்காலுக்கு கீழ் இயக்கம் இல்லாமல் போக சக்கர நாற்காலியில் இயங்க வேண்டிய ஒருவரானார். 2009 இல் யுத்தம் முடியும் வரையான காலத்தில் புலிகளின் சர்வதேச பிரிவை சக்கர நாற்காலியில் இருந்தபடி நிர்வகித்த கஸ்ட்ரோ அவர்தான். இந்திரா நகரில் இருந்த புலிகளின் அலுவலகத்திற்கு 1988 ஜனவரியில் நான் போன போது அவர்தான் அதன் பொறுப்பாளர்.



கலாநிதி கந்தையா மற்றும் ஒரு வானொலி ஊடகவியலாளருடன் எஸ்.டி.எஸ்.

அச்சமயம் அங்கு இன்னொரு தெரிந்த முகமும் இருந்தது. அவர் ராஜன். பின்னாளில் புலிகளின் யாழ் அரசியல் பொறுப்பாளராக இரண்டு தடவைகள் மெச்சும்படி பணியாற்றியவர். இப்போது குடும்பத்துடன் லண்டனில் வசிக்கிறார். உண்மையான, நேர்மையான, கொள்கைப் பற்றுள்ள போராளி என்று நான் மதிப்பவர். இப்போதும் எங்கள் நட்பு தொலைபேசி மூலம் தொடர்கின்றது. ஆரம்பத்தில் திலீபனின் உதவியாளராக இருந்தவர். உண்ணாவிரதம் இருக்கும் திலீபனின் படங்களில் எல்லாம் திலீபனுக்குப் பக்கத்தில் நீங்கள் ராஜனைக் காணலாம். சாகும் வரை உண்ணாவிரதமிருந்து திலீபன் மரணித்த பின்னர், புலிகள் – இந்தியப் படைகள் மோதல் வெடித்தது. அதற்கிடையில் – 1988 ஜனவரிக்கு இடையில் – எப்படியோ சென்னை வந்து புலிகளின் இந்திராநகர் அலுவலகத்தில் செயற்படத் தொடங்கியிருந்தார். அவரும் அப்போது சின்னப் பையன்தான். அதனால் அவரை 'தவ்வல் ராஜன்' என்றும் பட்டம் சூட்டி அழைத்தனர்.

சென்னை வந்திறங்கிய நான் புலிகளுக்கு சென்னையில் ஓர் அலுவலகம் இயங்குவதாக அறிந்து அங்கு போனபோது, காஸ்ட்ரோவுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ என்னைத் தெரிந்திருக்கவில்லை.

நான் யாழ்ப்பாணம், உதயன் பத்திரிகை பிரதிநிதி என்று கூறியபோது 'அப்படியா? நல்லது!' என ஒரு முகமனுக்குப் பதில் தரும் பாணியில்தான் அவர் பேசினார். பிற்காலத்தில் அவர் மிக நெருக்கமான நண்பர். அப்போது நானும் என்னைப் பற்றி அதிகம் சுய பிரபலாபம் செய்ய விரும்பவில்லை.

நான் இந்த விலாசத்தில் தங்கி உள்ளேன், நான் சென்னையில் இருப்பது பற்றிய தகவலை முடியுமானால் கிட்டுவுக்குத் தெரிவியுங்கள் என்று கூறி என் விலாசத்தை எழுதி கொடுத்துவிட்டு வந்தேன்.

மாலையில் நான் தங்கியிருந்த சிவராமன் வீட்டுக்கு பதறியடித்துக்கொண்டு பெரிய பி.எஸ்.ஏ. பெண்டம் மோட்டார் சைக்கிள் ஒன்றில் இன்னொருவரையும் கூட்டிக் கொண்டு வந்தார் கஸ்ட்ரோ. *"உங்களை நன்கு கவனிக்கச் சொல்லியுள்ளார் கிட்டண்ணா. உங்கள் சென்னைப் பாவனைக்கு இந்த மோட்டார் சைக்கிளை வழங்கும்படியும் தகவல் தந்துள்ளார். உங்களைத் தன்னிடம் ஒரு தடவை கூட்டி வரும்படியும் குறிப்பிட்டுள்ளார்"* – என்றார் கஸ்ட்ரோ.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

முதலாவது – தளத்தில், களத்தில் புலிகளும் இந்தியப் படைகளும் சண்டையிடுகிறார்கள். பெரும் யுத்தமே வடித்துள்ளது. ஆனால் சென்னையில் புலிகள் பகிரங்கமாக அலுவலகம் வைத்து இயங்குகின்றார்கள். ஆள்களைச் சந்திக்கின்றார்கள். அறிக்கை வெளியிடுகிறார்கள். அந்த அறிக்கைகளை நாங்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டால் இந்திய அமைதிப் படைகள் எங்கள் மீது பாய்கிறது. ஆக, ஒரு புலிப் பிரமுகரை மட்டும் வீட்டுக்காவலில் வைத்து இருக்கின்றார்கள். மற்றபடி எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை.

அடுத்தது – இந்திரா நகரில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சில வீடுகளில் காயமடைந்த புலிப் போராளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றமையும் நான் அவதானித்தேன்.

எல்லாம் வியப்பாக இருந்தன. *"வீட்டுக் காவலில் இருக்கும் கிட்டுவைப் பத்திரிகையாளர் சந்திக்க விடுவார்களா?"* – என்று நான் அப்பாவித்தனமாகக் கேட்டேன்.

என்னை ஒரு மாதிரிப் பார்த்த கஸ்ட்ரோ *"ஏன் பத்திரிகையாளர் என்று சொல்கின்றீர்கள்? எங்கட இந்திராநகர் ஒபீஸில் நிற்கிற ஒரு போராளி மாதிரி எங்களோட வாங்கோ. கிட்டண்ணையின்ர வீடு துப்புரவு செய்ய, சமையல் செய்ய எங்கள் ஒபீசில் இருந்துதான் தினசரி ஆள்கள் போறவை"* – என்றார் அவர்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இந்திய படையினருடன் முறுகல். சென்னையில் மற்றொரு முரண்பாட்டு முனையைத் திறப்பது உசிதமானது என எனக்குப் படவில்லை.

*"இலங்கை புறப்பட முன்னர் எப்படியும் கிட்டண்ணாவைச் சந்திப்பேன் என்று சொல்லுங்கோ. என்னிடம் இந்தியாவில் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான லைசென்ஸ் இல்லை. அதனால் அதுவும் வேண்டாம். கிட்டண்ணாவுக்கு அதற்கும் நன்றி சொல்லுங்கள்."* – என்றேன் நான்.



புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளராக கஸ்ட்ரோ.

*"இல்லையண்ணை. சிலோன் பொடியங்கள் எண்டு சொன்னால் இங்கே லைசென்ஸ் கேட்க மாட்டினம்."* – என்றார் காஸ்ட்ரோவுடன் வந்த மற்றொரு பையன். எனினும் மோட்டார் சைக்கிள் வேண்டாம் என்று நான் மறுத்துவிட்டேன்.

எனினும், ஜூ.வியில் நான் எழுதும் கட்டுரைகளுக்கு யாழ்ப்பாணம் யுத்த நடவடிக்கைகள் தொடர்பில் படங்கள் தேவைப்படுகின்றன என்றேன் அவரிடம் நான்.

*"இந்திரா நகர் ஒபிஸுக்கு வாங்கோ தாராளமாகப் பெற்றுத் தரலாம்"* – என்று கூறிவிட்டு கஸ்ட்ரோ புறப்பட்டார்.

அவர் போன பின்னர்தான் நான் நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தேன். கிட்டுவைக் களவாய்ப் போய்ச் சந்திக்க வாய்ப்பு இருக்கின்றது. யுத்தம் நடைபெறும் இந்தச் சமயத்தில் புலிகளின் தமிழகப் பொறுப்பாளரின் கருத்து – அதுவும் வீட்டுக்காவலில் இருக்கும் கிட்டு போன்ற மூத்த தளபதியின் எக்ஸ்க்ளூசிவ் கருத்து மிகவும் முக்கியமானது. பயத்தில் அந்தச்



தளபதி கிட்டு

செய்தியைத் திரட்டும் அருமையான வாய்ப்பைத் தவறவிட்டு விட்டேனோ என்று சிந்தித்தேன். ஆசிரியர் சிவநாயகம் இப்போது என் முன் இருப்பார் என்றால் துணிச்சலுடன் போய் வா என்று என்னை தட்டிக் கொடுத்து இருப்பார். வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கிட்டுவைப் பேட்டி கண்டு என்று எழுதினால் எவ்வளவு பரபரப்பாக இருக்கும் என்று ஆசை தூண்டும். வேண்டாம் சென்னையில் குழப்பத்தை ஏற்படுத்தினால் சிக்கல் வரும் என்ற பயம் அதை மிஞ்சும்.

அப்படி மனசு அல்லாடிக்கொண்டு இருந்த போதுதான் ஜூனியர் போஸ்ட் முதல் இதழுக்கு பரபரப்பாக ஏதேனும் வேண்டும் என்றார் ஜூ.வி. ஆசிரியர் ராவ். என் மனதில் இருந்த விடயத்தை நான் தயங்கித் தயங்கி முன்வைத்தேன்.

அவர் ஒரேயடியாக உஷார் தந்தார்.

*"யோசிக்காமல் களத்தில் இறங்குங்கள். வெற்றியோடு திரும்புங்கள். எது வந்தாலும் பார்த்துக்கொள்ளலாம்"* – என்று ஆசி கூறி, ஆலோசனை தந்தார் அவர்.

அவரின் பெயர் ராகவேந்திர கால்வே. சுருக்கமாக 'ராவ் ஸார்' என்போம். தமிழ் அத்துப்படி. மிகவும் தேர்ந்த பத்திரிகையாளர். ஜூனியர் விகடனைத் தூக்கி நிறுத்தியவர். அவரும் எனக்கு ஒரு வகையில் வழிகாட்டியே.

மராட்டிய வீரன் சிவாஜியின் துணிச்சல் அவருக்கு எப்போதும் இருக்கும்.

அவர் தந்த உஷாரில் களத்தில் இறங்கினேன். க்யூ பிரிவு விசேட படையினரின் காவலில் வைக்கப்பட்டிருந்த கிட்டுவை அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு என்னால் சந்திக்க முடிந்ததா, பேட்டி காண முடிந்ததா, விசேட செய்தி எதையும் பெற முடிந்ததா? விவரம் நாளை பார்ப்போமா?

(வளரும்…)

# மகப்பேறின்றி தவிக்கும் மக்களுக்குதவும் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை!



இலங்கைத் திரு நாட்டின் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வடபுறத்தேயுள்ள தெல்லிப்பழையில் 1949ஆம் ஆண்டு தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 72 ஆண்டுகளாக மருத்துவ சேவையை கூட்டுறவின் ஊடாக வழங்கி வரும் வைத்தியசாலையாக இது விளங்குகின்றது.

கூட்டுறவினூடான மருத்துவ சேவையை தோற்றுவாய் சுதந்திர காலத்தில் தெல்லிப்பழை மற்றும் அதனைச் சூழவுள்ள வடக்கே காங்கேசன்துறை முதல் தெற்கே சுன்னாகம் வரை மற்றும் கிழக்கே குப்பிளான் முதல் மேற்கே சண்டிலிப்பாய் வரையான அனைத்து பிரதேசங்களும் விவசாயக் கிராமங்களாகவே இருந்தபோது இங்கு வாழ்ந்த மக்களுக்கு மருத்துவ சேவையை மிகக் குறைந்த செலவுடன் வழங்கவேண்டுமென்ற சிந்தை அப்போதைய சமூகத்துக்கு இருந்தது. அதனை எவ்வாறு வழங்குவதென்பது பாரிய சவாலுக்குரிய விடயமாகியிருந்தவேளை உருவான எண்ணக்கருதான் கூட்டுறவினூடான மருத்துவ சேவை என்பது.

அதற்குச் செயல்வடிவம் கொடுக்க முனைந்த சமூக ஆர்வலர்களிற்குக் கைகொடுக்கும் முகமாக அமரர்

★தம்பு கனகரத்தினம் எனும் கொடையாளர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு முன்னிருந்த தனது 69 பரப்புக் காணியை கூட்டுறவு வைத்தியசாலை அமைப்பதற்காக சங்கத்துக்கு உவந்தளித்திருந்தமை மருத்துவசேவையின் சிகரத்துக்கு அச்சாணியாயிருந்தது.

மருத்துவ சேவை ஆரம்பகட்ட வளர்ச்சி வைத்தியசாலை சேவை வழங்க ஆரம்பித்தது முதல் உட்கட்டுமான வளர்ச்சியை மேற்கொள்ளப் பலகொடையாளர்கள் முன்வந்திருந்தனர். குறிப்பாக, வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடம், துர்க்காதேவி மண்டபம், வீரமன் மருத்துவமனை கட்டடம், மலேசியா அன்பளிப்பு விடுதி எனக் கட்டடங்களும் அவற்றோடிணைந்த உட்கட்டுமானங்களும் வளர்ச்சியடைந்து சென்றதன் விளைவாக ஆரம்பத்தில் வெளிநோயாளர் பிரிவுடன் ஆரம்பமான வைத்தியசாலை நாளடைவில் மகப்பேறு மற்றும் பெண்நோயியல் சிகிச்சையை அதற்கே உரித் தான சகல வசதிகளுடனும் வழங்க ஆரம்பித்து வடக்கு மாகாணத்தின் தலைசிறந்த மகப்பேற்று வைத்தியசாலையாக விளங்கியிருந்தது.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் சேவைத்தரத்தை உணர்ந்து இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் மக்கள் மகப்பேற்றுச் சிகிச்சைகளைப் பெறுவதற்காக இந்த வைத்தியசாலையை நோக்கி வருகைதந்தனர். அவ்வாறு தூரதேசங்களில் இருந்து வரும் மக்கள் குடும்பமாகத் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுச்செல்ல ஏதுவாக வைத்தியசாலையில் சமையலறை மற்றும் மலசலகூடங்களுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்பட்டு சேவைகள் விஸ்தரிப்புச் செய்யப்பட்டிருந்தன.

மருத்துவ சேவையின் விரிவாக்கம் மகப்பேறு மற்றும் பெண்நோயியல் சிகிச்சையைத் தொடர்ந்து சிறுவர் நோயியல் சிகிச்சை என சேவைப்பரப்பை அகலப்படுத்தியிருந்த வைத்தியசாலை, அதில் வெற்றியும் கண்டு வந்திருந்தது.

குறிப்பாக வைத்தியசாலை முன்றிலில் இருந்த கட்டடத்தொகுதி வெளிநோயாளர் பிரிவாகத் தொழிற்பட்டிருந்தவேளை அதனைத் தொடர்ந்து கிழக்குப் புறமாக நீண்டிருந்த கட்டடத்தொகுதி நோயாளர் விடுதியாகவும் இந்த விடுதிகளுக்கான சமையலறை மற்றும் மலசலகூடம் என்பன கட்டடத்தின் வடக்குப் புறமாகவும் அமைந்திருந்தன.

இவற்றுக்கு அடுத்ததாக கிழக்குப் புறத்தில் சத்திரசிகிச்சைக் கூடத்துடன் கூடிய மகப்பேற்று சிகிச்சை அறைகள் காணப்பட்டிருந்தன. வைத்தியசாலையின் மேற்குப் புறத்தில் வீரமன் மருத்துவமனைக் கட்டடம் சிறுவர் நோயியல் சிகிச்சைக்காகவும் துர்க்காதேவி மண்டபம் அலுவலகமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. தென்மேற்கு மூலையில் அமைக்கப்பட்டிருந்த விடுதி தாதியர்களுக்கான தங்குமிடமென ஒட்டுமொத்த வைத்தியசாலையும் இயங்குநிலையில் காணப்பட்டிருந்தது.

உள்நாட்டு யுத்தமும் மருத்துவ சேவையினது பாதிப்பும் 1990 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கினது இடப்பெயர்வு வைத்தியசாலையின் சேவையை முழுமையாக நிறுத்துவதற்குக் காரணமாயிற்று. அன்று முதல் 1997 ஆம் ஆண்டுவரை குறித்த வைத்தியசாலை உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்டிருந்ததால்

★எந்த ஒரு சேவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தவிர 1996 ஆம் வருட யுத்தம் வைத்தியசாலையின் இரண்டு கட்டடத் தொகுதிகளை முற்றாகச் சேதப்படுத்தியதுடன் ஏனைய தொகுதிகளைப் பகுதியளவில் சேதமாக்கியிருந்தது. குறித்த கட்டடங்கள் புனரமைப்பதற்கான வசதிகளின்மையால் இன்றும் அதே நிலையிலேயே காணப்படுகின்றன.



செயற்கை கருத்தரிப்பு ஆலோசனை மையத்திறப்பு திறப்புவிழாவில் ....

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் தற்காலிக சேவைக்கு உதவி புரிந்தது

1997 ஆம் வருடம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அமைவிடம் வரையான பகுதி உயர்பாதுகாப்பு வலய விடுவிப்புக்குட்பட்டிருந்தது. அவ்வேளை வடமாகாண சுகாதார பணிமனையின் வேண்டுகோளுக்கு இணங்க தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தனது தற்காலிக சேவையை இங்கு ஆரம்பித்திருந்தது. இந்தச் சேவை 2012 ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது.

2012 ஆம் ஆண்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தனது சொந்த இடத்துக்குச் சென்ற பின்னர் இந்த வைத்தியசாலை மீண்டும் சோபை இளந்து காணப்பட்டது. காரணம் 2012 ஆம் ஆண்டு வரையான

★ காலப்பகுதிக்குள் மீள்குடியேற்றம் என்ற வகைப்பாட்டின் கீழ் வழங்கப்பட்டிருந்த நட்ட ஈடுகளையோ சலுகைகளையோ இந்த வைத்தியசாலை பெற்றிருக்கவில்லை. காரணம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இயங்கிவந்தமையால் ஆகும்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வெளியேற்றத்தால் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை நிரப்ப போதுமான நிதிவளமோ, ஆள்பலமோ, உதவிகளோ அற்ற நிலையில் வைத்தியசாலையினுடைய சங்கம் மீள புத்துருவாக்கப்பட்டு பலவழிகளில் செயற்பட முயற்சித்து 2019 ஆம் ஆண்டிலேயே ஓரளவு தனது சேவையை புத்துயிரூட்டிக்கொண்டது.

## கூட்டுறவு வைத்தியசாலையாக மருத்துவசேவையின் புத்துயிர்ப்பு

2019 ஆம் ஆண்டில் கருவளவாக்கம் மற்றும் பெண்ணியல் நோய் பிரிவு வைத்தியசாலையில் மீள

★ஆரம்பிக்கப்பட்டிருந்துது. கையில் எந்தவொரு நிதி வளமுமின்றி பெண்நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ந. சரவணபவ ஜயாவினுடைய முழுமூச்சான உந்துதலுடனும் நேரம் பாராத சேவையுடனும் வைத்தியசாலை தனது சேவையை மீள ஆரம்பித்தது. முதற்கட்டமாக முழுமையான கடனுடன் ஒரு கதிரியக்க கருவி கொள்வனவு செய்யப்பட்டுச் சிகிச்சை மெதுவாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குறித்த கருவிக்கான கடன் பகுதி பகுதியாக ஓராண்டுக்குள் செலுத்துவதாக ஒப்பந்தத்துடன் ஆரம்பமானது. கடன் என்பது இருந்தபோதும் கூட்டுறவு ஊடான சேவை என்ற கொள்கையில் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளாது வேறு எங்கும் ஒப்பிட்டுப்பார்க்க முடியாத அளவு குறைந்த செலவில் நிறைவான சேவையை வழங்கி வந்தது. அதி விசேடமாக வறுமைக்குட்பட்ட குடும்பத்தவர் களுக்கு கிராமஉத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின் மேல் இலவசமாகவே சேவைகள் வழங்கப்பட்டுவந்தன.

இத்தகைய போக்கில் தனது சேவையை சிறிது சிறிதாக வளர்த்து 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஐயுஜ எனும் கருவளவாக்கச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆரம்பித்திருந்தது. ஐயுஜ சிகிச்சை என்பது வறியவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்திருந்த நிலையை மாற்றி வறியவர்களும் பணச்செலவின்றி சிகிச்சைபெற இந்தத் திட்டம் வித்திட்டது. அதாவது பணமுடையோர் பணத்தை கொடுக்கின்றபோது அதிலிருந்து சேமித்து அபிவிருத்திக் கணக்கில் வைப்பிலிடப்படும் பணம் ஏழ்மை நிலையிலுள்ளோர்க்கு இலவச சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலாக மருந்தக சேவையும் இந்த ஆண்டில் ஆரம்பிக் கப்பட்டு சிகிச்சை பெறுவோருக்குக் குறைந்த பெறுமதியில் மருந்துகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி சேவை பிரதானமானதாக இருக்க 2020 இன் பிற்பகுதியிலிருந்து வைத்திய ஆலோசனைச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன்பிரகாரம் பொது நோயியல், நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதி, என்பு முறிவு நெறிவு, இருதய சிகிச்சை என மேற்படி நோயியல் நிபுணர்களது வைத்திய ஆலோசனைச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஆலோசனைச் சேவைக்கான வைத்தியசாலைக் கட்டணம் மிகவும் குறைவாகவே அறவிடப்பட்டு வருகின்றது. மேலும் ஆய்வுகூடப் பரிசோதனைகளைச் சலுகை அடிப்படையில் மேற்கொள்ளும் திட்டமும் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வெளிநோயாளர் பிரிவு மாலை வேளைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவைகளுக்கு மேலாக மாதாமாதம் நடமாடும் மருத்துவ ஆலோசனை சேவைகள் கிராமங்கள் தோறும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## முப்பரிமாண தொழில்நுட்பத்துடன் கதிரியக்கக் கருவிப் பரிசோதனை

மேலும் மருத்துவ சேவைகளை வினைத்திறனாக மேற்கொள்ள வேண்டுமெனில் நோய் நிர்ணயம் துல்லியமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்குப் பல கருவிகள் தற்காலத்தில் உள்ளபோதும் எமது நிதி பலவீனம் அவற்றைக் கொள்வனவு செய்ய போதுமானதாக இல்லாமையால் மனக்குறையுடனேயே சேவையைத் தொடர்ந்துவந்தோம். ஆனால் தற்போது கதிரியக்க சேவையைத் துல்லியமாக மேற்கொள்ளவென முப்பரிமாண தொழில்நுட்பத்துடன் கூடிய கதிரியக்க கருவி கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு வினைத்திறனான சேவை நோயாளர்களைச் சென்றடைவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## அபிவிருத்திக் கணக்கும் இலவச மருத்துவ சேவைகளும்

வைத்தியகலாநிதி ந. சரவணபவ தனக்கான பணம் என்று எதனையும் பெறாது அதனை வைத்தியசாலைக்கான அபிவிருத்திக் கணக்கு என்ற ஒன்றை ஆரம்பிக்கச் செய்து அதில் சேமித்து வந்ததோடு குறித்த கணக்கில் உள்ள பணத்தின் வாயிலாக இலவச சேவைகளை மேற்கொள்ளப் பேருதவி புரிந்தார். இன்றும் குறித்த கணக்கில் சேமிப்பதோடு அதில் உள்ள பணத்தின் வாயி லாக இலவச சேவைகளை மேற்கொள்ளப் பேருதவி புரிந்துவருகின்றார்.

விசேடமாக ஆரம்ப காலத்தில் சிகிச்சைகளை ஆரம்பிக்கவென கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கருவிகளது கடனில் கணிசமான தொகை அபிவிருத்திக் கணக்கில் உள்ள பணத்தினூடாகவே ஈடுசெய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

வைத்தியசாலை பல சேவைகளை ஆரம்பித்துள்ளபோதும் கருவளவாக்க சிகிச்சையே பெரிதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமைக்குக் காரணம் யாதெனில் இலவசமானதும் குறைந்த செலவிலும் சேவை வழங்கப்படுவதாகும். 2019 ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப்பகுதிக்குள் ஏறத்தாழ 800 பேருக்குமேல் இலவசமாகக் கருவளவாக்கச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 2020ஆம் ஆண்டு வைகாசி முதல் 2021ஆம் ஆண்டு சித்திரை வரையான ஓராண்டில் மட்டும் 525 பேருக்கு இலவசமாக கருவளவாக்கச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

# அரச உத்தியோகத்தர் மீண்டும் பணிக்கு முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை



அரச ஊழியர்களை மீண்டும் பணிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ள அரசாங்கத்தின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

குறித்த தீர்மானத்தின் போது அதிகாரிகள் ஒரு முக்கியமான விடயத்தை கவனத்திற் கொள்ளாமல் விட்டுள்ளனர் எனக் குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் தடுப்பூசியின் முதல் டோஸை மாத்திரமே செலுத்திக் கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பணிக்கு வருபவர்களின் வீட்டில் உள்ளவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளார்களா என்பது தெரியவில்லை. எனவே எதிர்காலத்தில் நிலைமை மாறலாம் எனவும் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

# 18 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு அடுத்த கட்டமாகக் கொரோனாத் தடுப்பூசி

கொழும்பு, ஒக. 03

தடுப்பூசித் திட்டத்தின் அடுத்த கட்டமாக 18 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தற்போது தடுப்பூசி செலுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்நிலையில் அடுத்த கட்டமாக 18 – 30 வயதுடையவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஏற்கனவே, 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# இருபெரும் துரோகங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர்

## ஹரிணி அமரசூரிய எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 03

சமீபத்திய அரசியல் வரலாற்றில் பொதுமக்கள் இரு பெரும் துரோகங்களை எதிர்கொண்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர ஒன்றிணைந்த மக்கள், அந்த ஆட்சியால் அதிருப்தி அடைந்தனர்.

பின்னர் தேசியப் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை பற்றிய வாக்குறுதிகளின் அடிப்படையில் 2019 இல் மக்கள் மீண்டும் நம்பிக்கையை இழந்துள்ளனர் என ஹரிணி அமரசூரிய கூறினார்.

துரோகங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது பல்வேறு வழிகளில் தீர்வுகளைத் தேடுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், அதே தரப்பினர் தற்போதும் மக்களை மீண்டும் ஏமாற்றவும் காட்டிக் கொடுக்கவும் புதிய தோற்றத்துடன் வெளியே வரத் தயாராகி வருகின்றனர் என்றும் ஹரிணி அமரசூரிய கூறினார்.

எனவே மக்கள் மீண்டும் ஏமாறாமல் தடுப்பதற்கு அனைத்து முற்போக்கு சிந்தனையுடைய அனைவரையும் ஒன்றிணையுமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

# தடுப்பூசி பெறாதவர்கள் குறித்து கணக்கெடுப்பு

இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில், தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணமடைந்தவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு ஏற்ப அவர்களில் சுமார் 95 சதவீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகக் கொரோனா ஒழிப்பு விசேட குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதும் அவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, பிரதேச செயலக மட்டத்தில் துரித கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டு, சில தினங்களுக்குள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்து அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது என்றும் நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் செயற்படுவதும் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதும் மக்களின் கடமையாகுமென, ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு வருகை தரும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது தொடர்பாகவும் கொரோனா குழு கவனம் செலுத்தியுள்ளது.

# அர்ஜுன் அலோசியஸுக்கு எதிரான வழக்கு செப்டெம்பர் விசாரணைக்கு!

கொழும்பு, ஒக. 03

பேர்ப்பச்சுவல் ட்ரஷீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவருக்கு எதிரான வழக்கு செப்டெம்பர் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு வந்தபோதே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதற்கிடையில், செப்டெம்பர் 6 ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு வழக்கின் இரண்டாவது சாட்சிக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனாத் தடுப்பூசி செலுத்தி நாட்டை திறப்பதே சிறந்த தீர்வு

## நாமல் கூறுகின்றார்

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையிலேயே நாட்டை முழுமையாகத் திறப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்துக்கு வழங்கப்பட்ட அனுமதி குறித்து கண்டியில் ஊடகவியலாளர்கள் கேள்வி யெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர் நாட்டை முழுமையாகத் திறப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டவை அல்ல எனக் குறிப்பிட்டார்.

மேலும் தடுப்பூசி திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்படும் நேரத்தில் படிப்படியாக நாட்டைத் திறப்பதே சிறந்த தீர்வு என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



இதேவேளை, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

# மகப்பேறின்றி தவிக்கும் ......

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சவால்கள் நிறைந்த சமூக சேவை பயணம்**

இவையிருக்க வைத்தியசாலை மேற்கொள்ளும் உன்னதமான சேவைகளிற்கு இதுவரை எந்த ஒரு பாரிய அனுசரணையும் கிடைக்கப்பெறவில்லை. கிடைக்கின்ற வருமானத்தை மதிப்பீடு செய்து கடன் அடிப்படையிலேயே ஒவ்வொரு விடயங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி கருவளவாக்கச் சிகிச்சைச் சேவை என்பது எமது பிராந்தியத்துக்கு எவ்வளவு அவசியமானது என்பது அனைவரும் அறிந்ததே. எமது சமூகத்தில் சனத்தொகை அடர்த்தி என்பது பெரிதும் குறைவடைந்துவரும் நிலைக்கு ஒரு பிரதான காரணம் குழந்தைப்பேறு என்பது இன்று பலருக்கு இயற்கையாக இடம் பெறுவதில் பல தாக்கங்கள் காணப்படுகின்றமையாகும்.

இந்நிலையில் பணம் படைத்தவர்கள் எங்கும் சென்று தமது சிகிச்சையை மேற்கொள்ள முடியும். ஆனால் அதிகம் எம்மோடு வாழும் ஏழ்மைச் சகோதர சகோதரிகளின் நிலை என்ன என்பது தொடர்பில் சிந்திக்குமா எமது சமூகம்? ஆனால் நாங்கள் சிந்தித்தோம் சிந்திக்கின்றோம்.

அதனால்தான் இயலுமானவரை நடமாடும் சேவைகளை மேற்கொண்டு அனைத்து தட்டு மக்களையும் விழிப்புணர்வூட்டி அவர்களின் நிலைக்கேற்ப குறைந்த செலவிலோ அல்லது இலவசமாகவோ மருத்துவ சேவையை வழங்கிவருகின்றோம்.

இந்நிலையில் கொடையாளர்கள் தமது கரங்களை நீட்டுவார்களாயின் குழந்தைச் செல்வத்திற்காய் ஏங்கும் ஒவ்வொரு ஏழ்மைக் குடிமக்களையும் எம்மால் கரிசனையோடு சேவைக்குட்படுத்தி சமூக வலுவூட்டலை மேற்கொள்ள முடியும்.

**தொழிற்பாட்டின் நம்பகத்தன்மை**

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை கூட்டுறவு அமைப்பினூடாகவே சேவையை மேற்கொள்கின்றமையால் மேற்பார்வை, ஒவ்வொரு நிதிச் செயற்பாடுகளுக்குமான கண்காணிப்பு மற்றும் கணக்காய்வு என்பன அரச கட்டமைப்பான மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றமையுடன் ஏதும் பிரச்சினைகள் ஏற்படின் வைத்தியசாலைச் சேவை இடைநிறுத்தப்படும் நிலையில் வைத்தியசாலையின் சேவைத்தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பன அவற்றினூடு உறுதிப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடப்படவேண்டிய ஒன்று.

எனவே தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை நேற்று தனது 72 ஆவது அகவையை பூர்த்தி செய்வதில் பெருமிதம் கொள்கின்றோம். அதேபோல் தான் பெற்ற மகவுகள் தன்னைப் பெருமைப்படுத்த வருவார்கள் என்ற ஏக்கத்துடன் காத்திருக்கின்றாள் எமது தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை அன்னை.

**சு. கபிலன்**
**செயலாளர் - கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பழை.**
**சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 87

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**262. விடுதலைப் புலிகள் பிரேமதாஸாவுடன் பேசியது பிழையா?**

ஏன் பேச வேண்டும்? அதுவும் விடுதலைப் புலிகள் ஏன் பேசவேண்டும் என்ற கேள்வியைத் தான் நான் எழுப்புவேன். எழுப்பினேன். இந்தியா தமிழர் தரப்பில் ஸ்ரீலங்காவுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது. அது தமிழர்களின் எதிர்பார்ப்புக்களுக்கமைய இல்லாவிட்டாலும் அதன் அடிப்படையில், இந்தியாவோடு சேர்ந்து முன்னேறலாம் என்பது பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயம். அதுவே சிவில் அமைப்புக்களாலும், பிரஜைகள் குழுக்களாலும் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றுக்கு எதிராக "இந்திய அமைதிப்படை" இங்கு "ஆக்கிரமிப்புப் படையாக" மாறிவிட்டது என்றும் மக்களின் ஆதரவு தமக்கே உண்டு என்றும் விடுதலைப் புலிகள் பல தர்பார்கள் நடத்தினார்கள். ஆனால் எங்களது விடுதலைப் போருக்கு மாத்திரமல்ல, இருப்பிற்கே, உலை வைக்க எண்ணும் ஸ்ரீலங்காவுக்கு எதிராகத்தான் வியூகங்கள் ஒரு தொலைநோக்கில் அமைய வேண்டும்.அந்தத் தொலை நோக்கில் ஒரு சில படிகள் கட்டலாம்.

ஆனால் சுதந்திரம் கிடைத்த நாள்களிலிருந்தே, எம்மோடு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்ட ஸ்ரீலங்காவின் எந்த ஆட்சியாளர்களும், எம்முடன் பொருந்தியவற்றைத் தந்தவர்களல்லர். எழுத்தில் தந்தவற்றை கூட பௌத்த ஆதிக்கத்தின் அடக்கு முறையில் கிழித்து



எறிந்தார்கள். அப்படியானால் இந்த வரலாற்றையும் உதறி, 'ஏதோ தருவார்' என்ற அடிப்படையில் இந்தியாவையும் தவிர்த்து பேச உடன்பட்டது ஏன் என்பது கேள்வி.

அவர் (பிரேமதாஸா) விடுதலைப் புலிகளை மாத்திரம் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முன்வந்ததுதான், உண்மை.

விடுதலைப் போரில் அல்ல, அரசியல் சதுரங்கத்தில் தாம் எல்லோரையும் வெட்டி ஓடுகிறோம்,ஏதோ சாதிப்போம் என்ற நிலைதான் புலிகள் பக்கத்தில்.

இந்த பேச்சுவார்த்தைகளின் ஊடாக விடுதலைப் புலிகள் (பாலசிங்கம் கூட) இடதுசாரிகள் அமைந்திருந்த வட கிழக்கின் மாகாண அரசைக் குறி வைத்தனர். அதன் தொடராகத் தமிழகத்தின் புதிய அரசின் தெம்பால் பத்மநாபாவும் தோழர்களும் சென்னையில் கொல்லப்பட்டனர். வெறும் கையோடு நின்றதால் பின் பிரேமதாஸாவும் கொல்லப்பட்டார்.

இந்தியாவாலும் கைவிடப்பட்ட நிலைக்கு தமிழ் மக்களும் கொண்டு வரப்பட்டனர்.

இதே குத்து வெட்டு, குழிபறிக்கும் அரசியல்தான் இன்று வரை, விடுதலைப் புலிகள் இல்லாத நாள்களிலும் அவர்களை வைத்தே நடக்கிறது.

**263. எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள்? புலம் பெயர் சமூகத்தில் நடப்பவற்றையா? அல்லது தாயகத்திலா?**

இரண்டு பகுதிகளிலும்தான். ஆனால் இந்த விவரங்களுக்குள் போய் அவற்றை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரிப்பதில் தற்போதைக்கு பிரயோசனமில்லை. வருத்தத்திற்குரியது எதுவென்றால் இன்றும் தமிழர்களிடையே தமிழர்களை முதன்மைப்படுத்தி, அவர்களின் நன்மைக்காகவோ அபிலாஷைகளுக்காகவோ எந்த அரசியலும் நடக்கவில்லை. ஏதும் சொற்பம் நடந்ததானால் அது திம்பு மகா நாட்டில்தான்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரைக்கும் என்ன, அதன் பின்னரும் நாடாளுமன்றத்துக்கு எப்படி போவது என்ற அரசியலே நடந்தது.

1977இல் விடுதலைக்காக இளைஞர்கள் வந்தார்கள். அவர்களும் காலப் போக்கில் தாங்கள் தாங்கள் போனபோக்கில் தங்களை நிலை நிறுத்தியே விடுதலையைப் பார்த்தார்கள். அவற்றின் பின் 2009இல் முள்ளிவாய்க்காலின் அவலங்கள் நடந்தும் பழைய படி நாடாளுமன்ற அரசியலிலும் ஒருவரை ஒருவர் வெட்டி ஓடுவதிலும் தான் காலங்கள் கழிகின்றன.

ஒருவருடைய உண்மையான குணத்தை அறிந்து கொள்ள அவனிடம் அதிகாரத்தை தந்து பார்க்க வேண்டும் என ஆபிரகாம் லிங்கன் சொல்லுவார்.

எம்மவரிடையே நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் இவையேதான் நடக்கின்றன. ஊடகங்களில் இவைகளே பேசப்படுகின்றன.

இவற்றை எழுதும்போது சிலர் இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை இந்திய அரசுக்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். இதுதான் தமிழ் மக்களின் நிலை.

**264. அப்படியானால் தமிழ் மக்களின் (விடுதலைப் புலிகளின்) அழிவிற்கு அடிகோலியவர் யார்?**

⁕ எல்லாவற்றிற்கும் மேலாக வளர்ந்து, மாற்றமடைந்து வந்து கொண்டிருந்த புவியியலின் சர்வதேச சூழ்நிலைகளும் அவற்றுக்குள் அகப்பட்ட பிராதன இடைப்பட்ட நாடுகளும். அதில் ஸ்ரீலங்காவும் ஒன்று.



⁕ சாகும் வரை தமிழீழத்திற்காகத்தான் போராடுவேன் என்ற பிரபாகரனின் லட்சியம், பிடிவாதம்.

⁕ ஆயுதப் பலத்தால் தங்களை நிலை நிறுத்தலாம் என கணக்கெடுத்த அவரது நம்பிக்கையான தளபதிகள். தங்கு தடையில்லாமல் ஆயுதங்கள் வந்துசேரும் என்றும் அதற்கான வழிகளும் வசதிகளும் சர்வதேசத்தின் ஆதரவும் உண்டு என்று கணித்து அதனால் ஊக்கங்கள் தந்த புலம்பெயர் ஆதரவாளர்கள்.

⁕ பிரபாகரனாலும், அவரது சகாக்களாலும் குறி வைத்து அவர்களது இருப்புக்களையே கேள்விக்கு குறிகளாக்கிய முன்னைய சக போராளிகள், அவர்கள் உறவினர்கள்.


⁕ பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இக்கட்டு வருகிறதென்று தெரிந்தவுடன் பழிவாங்கலுக்காக முழுமூச்சாக ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்தியங்கிய முன்னைய விடுதலைக் குழுக்கள். ஒரு படுகொலையை செய்வதால், அவரின் செய்கைகளை அடக்கி, முடக்கிவிடலாம் என்று யாரும் எண்ணலாம். உடனுக்கு, அத்தோடு சேர்ந்து வரும் நியாயங்களும் எதிர்வினைகளும் சில நாள்களிலோ மாதங்களிலோ அடங்கிவிடலாம். ஆனால் அப்படி பாதிப்படைந்தவர் ஒரு குடும்பத்தின் அங்கம். அந்தக் குடும்பம் தொடர்ந்தும் பாதிக்கப்படுகிறது. அது அலை அலையாக அவர்களது சுற்றத்தாரையும் விலத்தி, விலத்தி, அவர்களில் ஓர் ஓர்மத்தையும் வன்மத்தையும் வளர்க்கிறது என்பது புரிவதில்லை. இப்படியாக ஆழ் மனத்தில் ஒரு கசப்புணர்வை வளர்த்தவர்கள் ஸ்ரீலங்காவின் உதவியாகவும் இருந்தார்கள்.

⁕ வழமைபோல உறுதியான செயற்பாடுகள் எதுவுமின்றி கடவுள்கள் மேல் பழியைப் போட்டு "கடவுளே காப்பாற்றும்" என்று தியானத்தில் இருந்து விட்ட தமிழ் மக்கள்.

- இவை எல்லாம் சேர்ந்து அழிவின் ஆரம்பங்களைத் தொடக்கி வைத்தன.

இவை எல்லாவற்றையும் அப்பொழுது மஹிந்த தனக்கு சாதகமாகப் பாவித்து சர்வதேச சூழல்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திருப்பினார்.

(வளரும்....)








**பல சித்திரங்கள் இன்றும் சரித்திரங்களாக மாறி சித்திரம் ஒரு கலையாக மட்டுமல்ல மொழியாகவும் இன்றைய உலகை ஆட்சி செய்து கொண்டுதான் இருக்கின்றது. இந்த இயந்திர உலகத்தில் சித்திரக் கலைக்கும் கலைஞர்களுக்கும் ஒரு தனி மதிப்பும் மரியாதையும் என்றும் இருக்கின்றது. சித்திரக்கலை என்பது ஒரு திறமை மட்டும் அல்ல அது ஓர் உணர்வும் ஆகும். கலைஞர்கள் இருக்கும் வரை கலைகள் அழிவதில்லை; இரசிகர்கள் இருக்கும் வரை கலைஞர்களும் அழிவதில்லை.**

# சித்திரத்தின் அஸ்திவாரம்!



இன்று எம்மைச் சூழ இருக்கும் ஒவ்வொரு விடயத்துக்கும் என்றோ ஒருநாள் அதற்கென்று ஒரு ஆரம்பம் இருந்திருக்கும். நாம் அதை ஆராய்ந்து பார்க்கும் வரை அது எமது அறிவுக்கு எட்டாது இருக்கும். நாம் உண்ணும் உணவு, உறையுள், பழக்கவழக்கங்கள், கலாசாரங்கள், மொழி, எழுத்துக்கள் இதுபோன்றே சித்திரமும் என்றோ ஒரு நாள் ஏதோவொரு காரணத்தோடு உருவாகியதுதான். அது பல ரூபங்களில், பல வடிவத்தில், பல நாமங்களில் வகைப்படுத்தப்பட்டு இன்று சித்திரம் என்பது பெரும் கலையாகக் காணப்படுகின்றது.

உலகில் பல தரப்பட்ட மொழிகள் காணப்படலாம். ஆனால், அவை எவ்வளவுதான் பழமையாக இருப்பினும் அவற்றுக்கெல்லாம் பழமையானதுதான் ஓவியக் கலை. அந்தவகையில் நாம் இலங்கை ஓவியங்களின் வரலாற்றை எடுத்து நோக்கினால், வரலாற்றுக்கு முந்திய கால சித்திரங்கள் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்று பேராசிரியர் டீ.பி நந்ததேவ, பேராசிரியர் பி.தெரணியகல ஆகியோரின் அனுமானம் கூறுகின்றது.

மேலும், சித்திரங்கள் வேடர்களால் வரையப்பட்டன என்று செலிக்மன் குறிப்பிடுகின்றார்.

இலங்கை வரலாற்றுக்கு முந்திய காலத்து குகை சித்திரங்களில் மனித உருவங்களும் விலங்கு உருவங்களுமாக அமைந்தன. அதில் விலங்கு உருவங்களிடையே யானை, சிறுத்தை, முதலை, மான், மரை, குரங்கு, உடும்பு, மயில், பூரான் போன்றவை முக்கியமானவையாகும். எளிமையான தளவடிவங்களாலும், குறியீடுகளாலும் காட்டப்பட்டுள்ள உருவங்கள் மூலமும் ஆதிமனிதன் பிரதான ஜீவனோபாயமான வேட்டையாடுதல் காட்டப்பட்டுள்ளது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குரங்கிலிருந்து மனிதன் உருவானான் என்றது போல் வேடுவர்களில் இருந்து ஓவியர்கள் உருவாகினார்கள் எனக் கூறலாம். அன்று வேடுவர்கள் சித்திரம் ஒரு கலை எனத் தெரியாமல் தமது தேவைக்காகவே சித்திரத்தை வரைய ஆரம்பித்தார்கள். அது எவ்வாறெனில் ஆரம்ப காலத்தில் வேட்டையாடி முடிந்த பின்னர் தாங்கள் வேட்டையாடிய விலங்குகளை இதுதான் என்பதை அடையாளப்படுத்த வேட்டையாடும் இடத்தில் குகைகளின் ஓவியமாக வேட்டையாடிய விலங்குகளை வரைவார்கள். மேலும், ஏதேனும் ஒரு பிரதேசத்தில் கூடுதலாகக் காணப்படும் விலங்குகளையும் அங்கு வரைந்து வைப்பது அவர்களின் வழக்கமாக இருந்தது. அங்கு வருபவர்களுக்குக் காண்பிப்பதற்காகவே இவற்றைச் செய்தார்கள்.

அந்தச் சித்திரங்களின் உள்நோக்கம் வேடுவர்களின் ஓவியத் திறமையைக் காண்பிப்பது அல்ல. அவர்கள் வேட்டையாடும் திறமையைக் காண்பிப்பதாகவே அன்று இருந்தது. ஆனால், இன்று வேட்டையாடுதல் கிடையாது. அவர்கள் ஆரம்பித்து வைத்த ஓவியமே இவ்வுலகை சூழ்ந்து நிற்கும் ஆழி போல் எம்மைச் சூழ்ந்து நிற்கின்றது.

அன்று அவர்கள் பயன்படுத்தியது இன்று நாம் உபயோகிக்கும் கருவிகள் அல்ல. மாறாக அவர்கள் அனைத்தையும் இயற்கையாகவே செய்தார்கள்.

இவர்களது ஓவியங்களில் பிரதான மூன்று வகைகள் காணப்படுகின்றன. கோடுகளால் படங்கள் வரையும் முறை, விரலினால் அல்லது தடித் துண்டினால் சாயம் பூசும் முறை மற்றும் சுரண்டல் முறைகளே அவையாகும்.

தனி உருவங்களாகவும் ஜோடி உருவங்களாகவும் விலங்கு மற்றும் மனித உருவங்களை அவர்கள் வரைந்தார்கள். வேறு சில குறியீடுகளும் வரைந்தார்கள்.

இவை அக்கால மனிதர்களின் கருத்துக்களை தகவல் பரிமாற்றத்துக்குரிய குறியீடுகளாக அமைந்து இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. உதாரணமாக தந்திரிமலை குகை, தொறவக்கை மலை குகை, பில்லவ குகை எனும் மூன்று முக்கியமான இலங்கை குகைகளில் இவை காணப்படுகின்றன.

சூழலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இயற்கைப் பொருள்களான கரி, வெண்களி, முருகைக்கல் போன்றவற்றை வர்ணங்களுக்காக உபயோகித்துள்ளதுடன் அவை நீர், பிசின் அல்லது விலங்குகளின் இரத்தத்துடன் கலந்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல சித்திரக்கலை இன்று உலகெங்கும் வளர அடிப்படையே இந்த வேடுவர்கள் தான். இந்தியாவிலும் கூட இதே ஆரம்பம்தான் காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்தே அக்காலத்தில் சிறிய சிறிய சம்பவங்கள் வரையப்பட்டன

இதன் பின்னர் மதம் தொடர்பான விடயங்கள் காட்சிகளாக வரையப்பட்டன. இலங்கையில் புத்தரின் வாழ்க்கை வரலாறு, கிறிஸ்தவ மதம் தொடர்பான சம்பவங்கள் மற்றும் இந்து மத வரலாறுகள் யாவுமே சித்திரங்களாகக் குகைகளிலும் மற்றும் வணக்கஸ்தலங்களிலும் வரைந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஓவியம் ஒரு கலையாக மாறியது. அதற்கென கலைஞர்கள் உருவாகினர்.


அவர்கள் எதிர்கால சமூகத்திற்கு இக்கலையைக் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அஜந்தா, எல்லோரா, சிகிரியா எனப் பல குகை ஓவியங்கள் இன்றும் எமக் குச் சான்றாக இருக்கின்றன. இவை மட்டுமன்றி இந்துக் கோயில்கள், பௌத்த விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என அனைத்திலுமே மதம் தொடர்பான ஓவியங்கள் காணப்படுகின்றன.



உலகம் முழுவதும் காணப்படும் அனைத்து மதங்கள் தொடர்பான ஓவியங்களும் அந்தந்த நாடுகளில் இன்றுவரை காணப்படுகின்றன. இவை நாட்டின் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் எடுத்துக் காட்டும் நோக்கிலும் மேலும் ஓவியர்களின் திறமையை எதிர்கால சமுதாயம் மதிக்க வேண்டும் என்ற வகையிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

முன்சி பஸ்றி

உலகம் முழுவதும் ஆபிரிக்க ஓவியம், இஸ்லாமிய ஓவியம், இந்திய ஓவியம், சீன ஓவியம், ஜப்பானிய ஓவியம் என அனைத்து விதமான ஓவியங்களும் காணப்படுகின்றன. இவை இவ்வாறு இருக்க மறுமலர்ச்சியின் பின்னர் பல போர்ச் சம்பவங்கள் மற்றும் கற்பனைச் சம்பவங்கள் என அனைத்துவிதமான சம்பவங்களும் சித்திரமாக வடிவமைக்கப்பட்டன. மறுமலர்ச்சியின் பின்னர் சித்திரக் கலையில் பெரும் சாதனைகள் இடம்பெற்றன. அதுமட்டுமன்றி சித்திரக் கலை உலகெங்கும் பெரும் கலையாகப் பரவியது.

அதன்பின்னர் இன்றைய காலப்பகுதியில் ஓவியம் கல்வித்துறையிலும் பெரும் பங்காற்றுகின்றது. ஓவியம் கல்வியாக மாறியுள்ளது. பல சித்திரங்கள் இன்றும் சரித்திரங்களாக மாறி சித்திரம் ஒரு கலையாக மட்டுமல்ல மொழியாகவும் இன்றைய உலகை ஆட்சி செய்து கொண்டுதான் இருக்கின்றது. இந்த இயந்திர உலகத்தில் சித்திரக் கலைக்கும் கலைஞர்களுக்கும் ஒரு தனி மதிப்பும் மரியாதையும் என்றும் இருக்கின்றது. சித்திரக்கலை என்பது ஒரு திறமை மட்டும் அல்ல அது ஓர் உணர்வும் ஆகும். கலைஞர்கள் இருக்கும் வரை கலைகள் அழிவதில்லை இரசிகர்கள் இருக்கும் வரை கலைஞர்களும் அழிவதில்லை.




# நிதிச்சந்தை மீதான நம்பிக்கையை நாம் மீளக் கட்டியெழுப்பியுள்ளோம்

## நிமல் லன்சா பெருமிதம்



கொவிட் தொற்றின் காரணமாக முழு உலகமும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை தவணைக் கடன் மற்றும் வட்டிதொகை ஆகியவற்றை உரிய நேரத்தில் செலுத்தியுள்ளமை, அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற வெற்றியாகும். இதன் மூலம் நிதி சந்தை மீதான நம்பிக்கையை அரசாங்கம் மீளக்கட்டியெழுப்பியுள்ளது. இது நாட்டின் பொருளாதார நிர்வாகத்தின் சாதகமான அம்சமாகும் என்று கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் தொற்று நோயால் உலகின் தனவந்த மற்றும் சக்தி வாய்ந்த நாடுகள் கூட கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டிருக்கும் நேரத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி செயற் பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துவருகிறது.

தடுப்பூசி வழங்கல் உள்ளிட்ட கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து எதிர்க்கட்சியினர் மக்களைத் தவறாக வழிநடத்த முற்பட்டனர். ஆனால் இன்று விரைவாகவும் வெற்றிகரமாகவும் தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களைப் பாதுகாக்கும் பணிகளை அரசாங்கம் தடையின்றி முன்னெடுத்து வருகிறது. அதற்காக தடுப்பூசி வழங்கும் பணிகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சி நாட்டை முடக்குமாறு வலியுறுத்தியுள்ள அதேவேளை பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்து வருகிறது. நாட்டை முடக்கிய பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. மக்கள் தற்போது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் பொறுப்புடன் செயற்படுகின்றனர். தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்து நாடு வழமைக்கு திரும்ப வேண்டும் என்பதையே மக்களும் எதிர்பார்க்கின்றனர். – என்றார்.

## 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கம் கவனவீர்ப்பு

கொத்தலாவல பாதுகாப்பு சட்ட மூலம் உட்பட 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சங்கம் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்திருந்தது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில், நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்தை அமுல்படுத்தாதே, அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான உயர் நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்து, இலவசக் கல்வியை இராணுவமயமாக்காதே ஆகிய சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி, ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

காந்தி பூங்காவில் காலை 10 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம், நகர் மணிக்கூட்டு கோபுர சுற்று வட்டத்தின் ஊடாக கோட்டமுனை பாலம் ஊடாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் முன்னாள் இருக்கின்ற சுற்று வட்டம் வரை சென்று, அங்கிருந்து மீண்டும் காந்திப் பூங்காவரை வந்தடைந்ததன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நேற்று நாட்டை வந்தடைந்தன




இலங்கையால் கொள்வனவு செய்யப்பட்ட மேலுமொரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நேற்று (திங்கட்கிழமை) நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதன்படி, ஒரு லட்சத்து 4 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகளுடனான விமானம் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



## தலைவர்களது முகமூடி மற்றும் ஆடையணிந்து சவப்பெட்டி தாங்கி திருமலையில் போராட்டம்

### கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து

திருகோணமலை–மடத்தடி சந்தியில் கொத்தலாவல சட்ட மூலத்துக்கு எதிராக கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொத்தலாவல சட்ட மூலத்துக்கு எதிராக ஒன்றிணைந்த மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மடத்தடி சந்தியில் ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி, வடகரை வீதியூடாக திருகோணமலை மத்திய பஸ் நிலையத்தை சென்றடைந்து, அங்கு கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


மேலும் நாட்டின் தலைவர்களது மூகமுடிகளை அணிந்து, ஆடைகளைக் குறிக்கும் வகையில் வேடமிட்ட சிலர் பிரேதப் பெட்டி ஒன்றினை ஏந்தியவாறு குறித்த ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டமை அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

அரசு குறித்த சட்ட மூலத்தை திருத்தி, இலவசக் கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர், அவர்கள் அவ்விடத்தை விட்டு கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

## முகப்புத்தகத்தால் மலர்ந்த நண்பியின் வீட்டிலிருந்த தங்க நகைகளை திருடிச் சென்ற யுவதி கைது!

முகப்புத்தகத்தினூடாக பழகிய நண்பியின் இல்லத்தில் 3 லட்சம் ரூபா பெறுமதியுடைய தங்க ஆபரணத்தை திருடிய 24 வயது டைய யுவதியொருவர் மினுவாங் கொடை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

சீதுவ பிரதேசத்தில் 23 வயதுடைய யுவதி ஒருவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் முகப்புத்தகத்தினூடாக மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய பிரி தொரு பெண்ணுடன் நண்பியாகியுள்ளார்.




இந்நிலையில், மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண்ணை கடந்த ஜனவரி மாதமும், கடந்த வாரமும் தனது வீட்டுக்கு வருமாறு சீதுவ பிரதேச யுவதி அழைத்துள்ளார்.

அவரின் அழைப்பிற்கேற்ப சீதுவ யுவதியின் வீட்டுக்குச் சென்ற மினுவாங்கொட யுவதி குறித்த வீட்டிலிருந்து கடந்த ஜனவரி மாதம் தங்க கைச்சங்கிலியொன்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ள தோடு, கடந்த வாரம் 3 லட்சம் பெறுமதியுடைய தங்கச் சங்கிலி யொன்றையும் திருடிச் சென்றுள்ளனர் சீதுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமையவே குறித்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளார். சமூக வலைத் தளங்களை உபயோகிக்கும் போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 1,958 பேர் பூரண குணம்

இலங்கையில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 1,958 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 80 ஆயிரத்து 868 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 11 ஆயிரத்து 349 ஆக பதிவாகியுள்ளது.

அதில் 25 ஆயிரத்து 973 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்ற அதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 508 ஆக உயர்ந்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை கடற்படை மீண்டும் சூடு: இந்திய மீனவர் ஒருவர் படுகாயம்!

## தமிழக மீனவர்கள் கொந்தளிப்பு



(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக் கிச்சூட்டில் இந்திய மீனவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தமிழக மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நாகபட்டின மீனவர்கள் கோடியாக் கரைக்கடலில் மீன்பிடித்த வேளை இலங்கை கடற்படையினர் அப்பகுதிக் கடலில் பிரவேசித்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கலைச்செல்வன் என்னும் மீனவன் தலையில் படுகாயமடைந்தநிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்த மீனவரின் தலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், இந்தச் சம்பவத்தை அடுத்து தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக உயர்வடைந்துள்ளது.

### பல வெளிநாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபாடுள்ள நாடுகள் தொடர்பான தகவல்களை பெறவும், எதிர்ப்பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிக்கவும் அந்த அமைப்புக்கள் செயற்படுகின்றன என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் சில நாடுகளின் செயல்பாடுகள், அவை உள்நாட்டில் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள் மற்றும் அவற்றின் இராணுவ இருப்பு ஆகியவற்றைக் கூர்ந்து கவனிப்பதே இந்த புலனாய்வு அமைப்புகளின் முக்கிய நோக்கம் என கூறப்படுகின்றது.

இந்தியப் பெருங்கடலில் இலங்கை ஒரு மூலோபாய இடமாக பார்க்கப்படுகிறது. பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக சில நாடுகளால் இலங்கை பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் சர்வதேச மற்றும் பிராந்திய வல்லரசுகளிடையே ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரிகள் இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்தி இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என நம்பப்படுகிறது. விடுதலைப் புலிகளுடனான போர் உச்சத்தில் இருந்தபோது வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரிகள் இலங்கையில் செயல்பட்டனர் என நம்பப்படுகிறது.

போரின் போது, அரச உயர்மட்ட கூட்டங்களை அவர்கள் பதிவு செய்யலாமென்ற அச்சம் ஏற்பட்டதாகவும், அந்த நேரத்தில் இருக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூடிய சந்திப்புகளைத் பதிவு செய்யும் நடவடிக்கைகள் பாதுகாப்பு தரப்புக்களால் தடுக்கப்பட்டன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊடக அமைச்சரும் அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல இது தொடர்பில் டெய்லிமிரருக்கு கருத்து தெரிவித்த போது, வெளிநாட்டு புலனாய்வு அதிகாரிகளை, குறிப்பாக இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டில் இருக்கும்போது அவர்களைக் கண்டறிவது கடினம் என்று கூறினார்.

வெளிநாடுகளின் உளவுத்துறை அதிகாரிகள் செயல்படுகின்றர் என நம்பப்படும் ஒரே நாடு இலங்கை அல்ல என்றும் அவர் கூறியுள்ளார். மற்ற நாடுகளிலும் இது நடப்பதை நாங்கள் காண்கிறோம், அங்கு உளவுத்துறை சேகரிப்புக்கு வெளிநாட்டு திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உள்ளூர் புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கையுடன் இருக்கிறன எனவும், எந்தவொரு வெளிநாட்டவராலும் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருந்தால் இலங்கை அதிகாரிகள் அதற்கு எதிராக செயல்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மேலும் 63 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் சாவடைந்த 63 பேரில் 36 ஆண்களும், 27 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட கூட்டத்தைக் கூட்டுமாறு ஒரு தொகுதி உறுப்பினர்கள் அவசர கோரிக்கையை எழுத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிகளில் 'மாநகராட்சி அன்புடன் வரவேற்கின்றது' என்ற விளம்பரப் பலகைகளை நாட்டுவதற்குக் கோரிய தீர்மானத்தைக் காண்பித்து, எந்தவொரு அனுமதியும் பெறப்படாமல், அலுவலகத்திற்கே தெரியாமல், விடுமுறை தினத்தில் திருட்டுத்தனமாக விளம்பர வளைவு நாட்ட முதல்வர் அனுமதி வழங்கினார் எனக் கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்ட நிறுவனம் வளைவை அமைக்க முற்பட்டபோது சில உறுப்பினர்கள் மற்றும் நில உரிமையாளர்களால் அது தடுத்து நிறுத்தப்பட்டது.

இச்சர்ச்சை தொடர்பில் மாநகர முதல்வர் உத்தியோக பூர்வமாக எந்த அறிவித்தலும் வெளியிடாத நிலைமையில், மாநகர சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் சிலர் இணைந்து இந்தக் கோரிக்கையை எழுத்தில் நேற்றைய தினம் மாநகர முதல்வரிடம் கையளித்தனர்.

மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மூன்றிற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒப்பமிட்டு ஓர் விசேட கலந்துரையாடலிற்கு கோரிக்கை விடுத்தால் 3 வேலை நாள்கள் இடைவெளியில் அது தொடர்பில் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

### 62 வீதமானோருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடுப்பூசியின் ஒரு டோஸையாவது பெற்றுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 6 இலட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் நேற்று வரை 4 இலட்சத்து 8 ஆயிரத்து 284 பேர் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸையாவது பெற்றுள்ளனர். இது 62.09 சதவீதமாகும்.

வடக்கில் மன்னார் மாவட்டத்தில் 67.54 சதவீதமானோர் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றுள்ளனர். அடுத்தபடியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 63.70 சதவீதமானோர் முதல் டோஸ் பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்கள் முறையே 3, 4, 5ஆம் இடங்களில் உள்ளன.

## 5 இலட்சம் ரூபா வீட்டுத்திட்டத்தின்

# மிகுதிக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி பயனாளிகள் நேற்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வீட்டுத்திட்டத்தின் மிகுதிக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி யாழ்., சங்கானை பிரதேச செயலகம் முன்பாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுழிபுரம் மத்தி ஜே/173 கிராம சேவகர் பிரிவு மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 2018 மற்றும் 2019 காலப் பகுதியில் ஜே/173 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 45 குடும்பங்களுக்கு ரூபா ஐந்து லட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த வீட்டுத்திட்டத்துக்கான நிதி எமக்கு முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. ஒரு பகுதி அளவு நிதி மட்டுமே எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. மிகுதி வேலைகளை நாங்கள் கடன்பட்டுத்தான் செய்துள்ளோம். இருந்தாலும் வேலைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

எமது வீடும் முழுமை பெறாத நிலை ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் கடன் கொடுத்தவர்களின் தொல்லை என நாங்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம்.

இந்த வீட்டுத்திட்டம் எங்களுக்கு வழங்குவதற்கு முதல் நாங்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தோம். ஆனால், இந்த வீட்டுத்திட்டமானது தற்போது எங்களைக் கடன் சுமையில் தள்ளியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் எமது விடயத்தைக் கருத்தில்கொண்டு எமது வீட்டுத் திட்டத்தின் மிகுதி நிதியை சீக்கிரம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## வலி. மேற்கு பிரதேச சபையின் முன்பாக

# சவப்பெட்டியுடன் உண்ணாவிரதம்

(எஸ்.நிதர்ஷன்)



வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் காவலாளியான இராதாகிருஷ்ணன் சிவகுமார் என்ப வர் பிரதேச சபையின் முன்னால் சவப்பெட்டியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

நிரந்தர ஊழியரான என்னைக் கடந்த 2015ஆம் ஆண்டு பணி இடைநீக்கம் செய்தனர்.

15 மாதங்களின் பின்னர் விசாரணைகள் எதுவுமின்றி எனக்கு மீண்டும் வேலை தந்தனர்.

அதன் பின்னர் நான் மதுபோதையில் கடமையில் இருந்ததாகக் கூறி கடந்த 2018 ஆம் ஆண்டு என்னை வேலையில் இருந்து பணிநீக்கம் செய்தனர்.

இது தொடர்பாக நான் பிரதேச சபையுடன் முரண்பட்டபோது வட்டுக்கோட்டை பொலிஸார் என்னை அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அதன்பின்னர் பொலிஸார் என்னை நீதிமன்றத்தை நாடுமாறு கூறினர்.

நான் நீதிமன்றத்தை நாடியபோதும் பிரதேச சபை நீதிமன்றத்துக்கு சரியான முறையில் சமூகமளிப்பதில்லை. இதனால் நான், பிரதேச சபையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது சட்டத்தரணிகள் அல்லது சமாதான நீதிவான் முன்னிலையில் எனது பிரச்சினைகளை விசாரணை செய்யுமாறு கூறினேன். ஆனால், பிரதேச சபை அந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

2018 ஆம் ஆண்டிலிருந்து நேற்று வரை மூன்று வருடங்கள் நான் விசாரணைகள் எதுவுமில்லாமல் வேலையும் இல்லாத நிலையில் இருக்கின்றேன்.

இந்தநிலையில், மன விரக்தி அடைந்த நான், எனக்கான நீதியை வேண்டி, பிரதேச சபையின் முன்னால் சவப்பெட்டியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நிந்தவூரில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு!

## மூவர் படுகாயம்

கல்முனை – அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள நிந்தவூர், அட்டப்பளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அக்கரைப்பற்று 19 பிரிவு காசிம் ஆலிம் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய சம்சுதீன் சஹாப்தீன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


நிந்தவூர் - அட்டப்பள்ளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, கல்முனையில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கிப் பயணித்த டொல்பின் ரக வான் ஒன்று அட்டப்பள்ளம் பகுதியில் வைத்து வானின் ரயர் ஒன்று வெடித்ததையடுத்து வான் வேகக்கட்டுப்பாட்டை மீறி, எதிரே அக்கரைப்பற்றில் இருந்து நிந்தவூருக்கு சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் பயணித்த மோட்டார் சைக்கிளுடனும் இன்னொரு மோட்டர் சைக்கிளுடனுமாக இரு மோட்டர்சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை உயிரிழந்ததுடன் மகன் உட்பட 3 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளது.

மேலும் வானை செலுத்திய சாரதியை கைது செய்துள்ள பொலிஸார், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







இலங்கை வங்கியின் 82ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை, அதன் திருநெல்வேலிக் கிளையில் கொண்டாடப்பட்டது.

1939 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி இவ்வாண்டு தனது 82 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது. அதனை யொட்டி இலங்கை வங்கியின் திருநெல்வேலிக் கிளையில் எளிமையான முறையில் கொண்டாட்டம் ஒன்று இடம் பெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் சி. தவலிங்கம் கலந்து கொண்டார். மதத் தலைவர்கள், ஓய்வு பெற்ற வங்கியியலாளர்கள், வாடிக்கையாளர்கள் உட்பட மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானவர்களுடன், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய நிகழ்வு இடம்பெற்றது.

# வாக்களித்த மக்கள் தற்போது ஏமாற்றப்பட்டுள்ளனர் - அநுர

நாட்டின் முன்னேற்றத்துக்கான எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்கள் தற்போது தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளமையை உணர்ந்துள்ளனர் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாக நாடு பின்பற்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளின் முடிவுகளை நாடும் மக்களும் அனுபவித்து வருவதாக அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் எதிர்காலம் இல்லை என்பதை அனைத்துத் துறைகளும் காட்டுகின்றன என்றும் கடன் காரணமாக பொருளாதாரம் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடன் தவணைகளை திருப்பிச் செலுத்த வெளிநாட்டு இருப்புக்கள் போதுமானதாக இல்லை, இதன் விளைவாக அரசாங்கம் அதிகபடியான பணத்தை அச்சிடத் தொடங்கியது என்றும் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க கடுமையான பொருளாதாரத் தந்திரோபாயம் இல்லை என்பதை அரசாங்கம் காட்டுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வீட்டில் உறங்கிய இளைஞன் மீது கிளிநொச்சியில் வாள்வெட்டு தாக்கு

கிளிநொச்சி - முரசுமோட்டை சேற்றுக் கண்டிப் பகுதியில், வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் குறித்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரியூட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# நாட்டில் திருமண நிகழ்வுகளை தவறாகப் பயன்படுத்துகின்றனர்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் குற்றச்சாட்டு

திருமண வைபவங்களை நடத்துவதற்காக வழங்கப்பட்ட தளர்வான விதிமுறைகளை சிலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

தற்போதைய வழிகாட்டுதல்களின் படி 150 பேர் வரை திருமணங்களில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமண வைபவங்களில் கலந்துகொள்பவர்களுக்கு மத்தியில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் எதிர்காலத்தில் இந்த விவகாரம் தொடர்பில் ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும் என அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அதன்படி கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டவர்கள் அல்லது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்களை திருமண நிகழ்வுகளில் அனுமதிப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் திருமணத்துக்கு வருபவர்கள் மற்றும் திருமண வைபவங்களை நடத்துபவர்கள் இந்த சூழ்நிலையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் உபுல் ரோஹண கேட்டுக்கொண்டார்.

கொரோனாத் தொற்று நிலைமை மோசமடைந்தால் திருமண நிகழ்வுகளை மட்டுப்படுத்த அல்லது கட்டுப்படுத்த வேண்டி ஏற்படும் என்பதால் சுகாதார வழிகாட்டுதல்களை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

# யாழ்.பல்கலை வவுனியா வளாகம் ஞாயிறு முதல் தனி பல்கலையாக!

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தனியான பல்கலைக்கழகமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் வவுனியா பல்கலைக்கழகமாக கடந்த மாதம் தரமுயர்த்தப்பட்டிருந்தது.

அதன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் அனைத்தும் ஞாயிறு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இலங்கையின் 17 ஆவது அரச பல்கலைக்கழகமாக வவுனியா பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு வட மாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக உருவாக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகமாக தரமுயர்த்தப்பட்டது.

தற்போது குறித்த வளாகம் ஒரு தனியான பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக கலாநிதி த.மங்களேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2021 இல் வெளியிடப்பெற்றது.